சமய
மறுவாழ்வுக்
குழு

# ஐஎஸ்ஐஎஸ் இஸ்லாமிய (கலி:ஃபா) ஆட்சியின் குறைபாடுகள்: சுருக்கமான விளக்கம்




பொதுக் கல்வித் தொடர்
நவம்பர் 2014

# அறிமுகம்

ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய நாடு (ஐஎஸ்ஐஎஸ்) எனும் தீவிரவாதப் போராளிகள் குழு, அண்மை மாதங்களில் உலகெங்கிலும் தலைப்புச்செய்தியாக இடம்பிடித்துள்ளது. இந்தக் குழுவின் கொடூரமான வன்செயல் நடவடிக்கைகளால் உலகெங்கிலும் பயமும் சினமும் ஏற்பட்டுள்ளது. பிணைப்பிடிக்கப் பட்டவர்களையும் சிறுபான்மை இன மக்களையும் மொத்தமாகக் கொன்று குவித்தல், பெண்களையும் சிறுமிகளையும் பாலியல் அடிமைகளாகப் பயன்படுத்துதல், இராணுவ வீரர்கள் மற்றும் செய்தியாளர்களின் தலைகளைத் துண்டித்தல் போன்றவை அவர்களது கொடூரமான வன்செயல்களில் உள்ளடங்கும். இந்தக் குழுவில் வெளிநாட்டுப் போராளிகள் பலர் சேர்வதையும் காண்கிறோம். பதின்ம வயதுப் பெண்கள் முதல் இளம் பட்டத்தொழிலர்கள் வரையிலானோர் அவர்களில் அடங்குவர். லெவன்ட் வட்டாரம் முழுவதும் இஸ்லாமிய (கலிஃபா) ஆட்சியை அமைப்பது ஐஎஸ்ஐஎஸ் குழுவின் இலக்கு என்ற நம்பிக்கையில், இவர்கள் இக்குழுவில் சேர்ந்துள்ளனர். ஐஎஸ்ஐஎஸ் குழுவில் இருப்பவர்கள் உண்மையில் யார்? பலவீனமான தனிமனிதர்களை ஐஎஸ்ஐஎஸ் எப்படி தொடர்ந்து கவர்கிறது? இஸ்லாமிய (கலிஃபா) ஆட்சி என்பது என்ன? ஐஎஸ்ஐஎஸ் உண்மையிலேயே இஸ்லாமிய ஆட்சிமுறையை உயிர்ப்பிக்கப்போகும் (கலிஃபா) ஆட்சியாக உருவெடுக்குமா? ஐஎஸ்ஐஎஸ் பற்றி உங்களுக்குத் தெளிவான புரிந்துணர்வு ஏற்பட, இவ்விவகாரங்களுக்கு இக்கையேடு விளக்கமளிக்கிறது.

# ஐஎஸ்ஐஎஸ் என்பது யார்?

ஈராக்கிய அல்-காய்தாவின் கிளைப்பிரிவான ஐஎஸ்ஐஎஸ், அண்மை ஆண்டுகளில் பல்வேறு பெயர் மாற்றங்களுக்கு உட்பட்டது. இந்தப் போராளிக் குழுவினர் தங்களை ஈராக்கிய இஸ்லாமிய நாடு (ஐஎஸ்ஐ), ஈராக் மற்றும் லெவன்ட் இஸ்லாமிய நாடு (ஐஎஸ்ஐஎல்), ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய நாடு (ஐஎஸ்ஐஎஸ்) என்றும், 29 ஜூன் 2014 அன்று இஸ்லாமிய நாடு (ஐஎஸ்) என்றும் பெயரிட்டுக்கொண்டனர். இந்தக் குழு, அபு பக்கர் அல்-பாக்தாதியை தலைவர் என்றும், தங்களது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் வட்டாரத்தை இஸ்லாமிய (கலிபா) ஆட்சி என்றும் அறிவித்தனர். ஈராக்கில் சன்னி பெரும்பான்மையினர் வாழும் வட்டாரங்களில் இஸ்லாமிய நாட்டை நிர்மாணிப்பது குழுவின் ஆரம்ப இலக்காக இருந்தது. ஆனால், சிரியாவின் உள்நாட்டுப் போரிலும் குழுவினர் ஈடுபடத் தொடங்கியதைத் தொடர்ந்து, சிரியாவில் சன்னி பெரும்பான்மையினர் வாழும் வட்டாரங்களும் இலக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

அல்-பாக்தாதிக்கும் அவரது தீவிரவாதக் குழுவினருக்கும் தெளிவான இலக்குகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. மத்தியக் கிழக்கு வட்டாரத்தில் நிலவும் பூசல்களின் விரிவாக்கமாகவே இவர்கள் செயல்படுவதுபோலத் தோன்றுகிறது.

*".. சமயத்தின் பெயரில் உலகைச் சூறையாடும் ஆண்கள் வருவார்கள், ஆட்டுத்தோல் போர்த்தி மக்களை ஏமாற்றுவார்கள், அவர்களின் பேச்சு சீனியைவிட இனிப்பானது, அவர்களது இதயமோ ஓநாய்களின் இதயமாகும்."*

# கல்விமான்கள் கண்டனம்

உலகெங்கிலும் 120க்கும் மேற்பட்ட முஸ்லிம் கல்விமான்கள் அல்-பாக்தாதியின் (கலி்ஃபா) ஆட்சியை நிராகரித்து, செப்டம்பர் 2014 பிற்பகுதியில் வெளியிடப்பட்ட பொது மடலில் ஐஎஸ்ஐஎஸ் புரியும் அட்டூழியங்களைக் கண்டித்துள்ளனர். இஸ்லாமியச் சமூகத்தின் இணக்கத்துடன் அமைத்தாலொழிய, (கலி்ஃபா) ஆட்சிக் கோட்பாடு சட்டப்படி ஏற்புடையதல்ல எனக் கல்விமான்கள் தீர்க்கமாகக் கூறுகின்றனர். அல்-பாக்தாதிக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம், இஸ்லாமியக் கோட்பாடுகளுக்குப் புறம்பானதாக இருக்கும் ஐஎஸ்ஐஎஸ் குழுவின் பற்பல தவறுகளையும் விரிவாகப் பட்டியலிட்டது. ஷரியா சார்ந்த விவகாரங்களை ஐஎஸ்ஐஎஸ் மிகையாக எளிமைப்படுத்தியிருக்கும் முறை, தீர்ப்புகளை வெளியிடுவதில் நிலைபெற்ற இஸ்லாமிய அறிவியலையும் கோட்பாடுகளையும் புறக்கணித்தல், தங்களது இலக்குகளை அடைவதற்கு வன்செயலைப் பயன்படுத்துதல், தண்டனை விதிக்கும்போது முறையான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும், கருணை காட்டவும், நீதியை நிலைநாட்டவும் தவறுதல் ஆகியவை அவற்றுள் அடங்கும்.[1] இஸ்லாமியப் போதனைகள், பண்புகள், கோட்பாடுகள் ஆகியவற்றை ஐஎஸ்ஐஎஸ் சீர்குலைக்கிறது. இஸ்லாம் அமைதியையும், நிதானத்தையும், கருணையையும் ஊக்குவிக்கிறது. கல்வி, நீதி, உண்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. நமக்கு அண்டையில், இந்தோனீசிய உலமாக்கள் மன்றமும் (மஜ்லிஸ் உலமா இந்தோனீசியா) ஐஎஸ்ஐஎஸ் குழு ஹராம் (தடுக்கப்பட்டது) என அறிவித்துள்ளது. உள்நாட்டில், ஐஎஸ்ஐஎஸ் குழுவின் தீவிரவாதச் செயல்களைக் கண்டித்து பெர்காஸ் (சிங்கப்பூர் இஸ்லாமியக் கல்விமான்கள் மற்றும் சமய ஆசிரியர்கள் சங்கம்) செய்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது. உள்ளூர் முஸ்லிம் சமூகத்தினர் ஐஎஸ்ஐஎஸ் குழுவுக்கு அல்லது அக்குழுவின் நோக்கத்திற்கு ஆதரவளிக்கவோ இரக்கப்படவோ கூடாது என்றும் பெர்காஸ் வலியுறுத்துகிறது.

1 மேல்விவரங்களுக்கு,தயவுசெய்து http://lettertobaghdadi.com இணையத்தளம் பார்க்கவும்

சுருக்கமாகக் கூறினால், இஸ்லாமிய நாட்டை நிர்மாணிப்பதே தங்கள் இலக்கு என ஐஎஸ்ஐஎஸ் கூறிக்கொள்கிறது. ஆனால், நாம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தோமானால், சந்தேகப்படாத முஸ்லிம்களைத் தங்களது வன்செயல் நோக்கத்திற்கு ஆதரவாக ஈர்க்கப் பயன்படுத்தப்படும் வசதியான பாசாங்கு இது என்பதை அறியலாம். ஐஎஸ்ஐஎஸ் குழு சமயத்திற்காக அல்லாது, தங்களது நில ஆதிக்க, அரசியல் இலட்சியங்களுக்காகச் சண்டை போடும் சாதாரணமான ஒரு போராளிக் குழு.

# இஸ்லாத்தின் கூற்றுகள்

அகில உலகுக்கும் அருட்கொடையாக நபிகள் நாயகத்தை (அமைதியும் அருளும் அவர் மீது உண்டாகட்டும்) வல்ல இறைவன் அனுப்பி வைத்தான். (புனித குர்-ஆன், அல் அன்பியா:107). அல்-அராஃப் வசனம் 7:156 மற்றும் அல்தவ்ஹித் புத்தகத்தில் புகாரியும் அல் தவ்பா புத்தகத்தில் நவாவியும் அறிவித்துள்ள ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களின்படி இறைவனின் கருணை அனைவருக்கும் உரித்தாகும் என்றும் இறைவனின் கோபத்தைவிட வெகு அதிகமாக இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். இந்த அடிப்படையில், ஐஎஸ்ஐஎஸ் குழுவின் கொடூரமான சண்டைகளும் உத்திகளும், அமைதியையும் கருணையையும் வலியுறுத்தும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் புறம்பானவை.

*"சமயத்தில் எந்தவித நிர்ப்பந்தமும் இருக்கக்கூடாது."*

ஐஎஸ்ஐஎஸ் குழுவினர் இஸ்லாத்தின் பெயரில் "பெரும் களவு" செய்து, உலகெங்கிலும் இஸ்லாத்தின் நற்பெயருக்கும், அமைதியும் சகிப்புத்தன்மையும் காக்கவேண்டும் என்ற செய்திக்கும் களங்கம் விளைவிக்கிறார்கள். ஐஎஸ்ஐஎஸ் ஆட்சியின்கீழ் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்துவிட்டனர். இஸ்லாமியச் சட்டத்தின்கீழ் இது தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஐஎஸ்ஐஎஸ் ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

நியாயமான காரணங்கள் எதுவுமின்றி ஓர் உயிரைக் கொல்பவர், மனித இனம் முழுவதையும் கொன்றுவிட்டதாகக் கருதப்படுவார் என இஸ்லாமியச் சட்டம் கூறுகிறது. அதே வேளையில், எவரேனும் ஓர் உயிரைக் காப்பாற்றினால், அவர் மனித இனம் முழுவதின் உயிரையும் காப்பாற்றியதாகக் கருதப்படும் (புனித குர்-ஆன், அல்-மய்தா:32). போரில் பங்குபெறாத, தற்காப்பில்லாத அப்பாவி மக்களை ஐஎஸ்ஐஎஸ் மூர்க்கத்தனமாகவும், ஆர்ப்பரிப்புடனும் கொல்கிறது. தம் கருத்துக்கு இணங்காதவர்களைக் கொல்லாத நபிகள் நாயகத்துடன் (ஸல்) இதனை ஒப்பிட்டுப் பாருங்கள். இணங்காதவர்களைக்

*ஐஎஸ்ஐஎஸ் முஸ்லிம் சித்தாந்தத்தைச் சிதைத்து, இஸ்லாத்தின் கொள்கைகளைச் சீர்குலைத்துவிட்டது. இஸ்லாம் அமைதியையும், நிதானத்தையும், கருணையையும் ஊக்குவிக்கிறது.*

கொல்வதற்கு அவர் அனுமதிகூட தரவில்லை. (நபிகளின் பாரம்பரியம், கிதப் த:ஃப்சிர் அல் குர்-ஆனில் புகாரியும் கிதப் அல்-பிர் வல்-சிலாவில் முஸ்லிமும் அறிவித்துள்ளபடி).

போர் விதிகளை நபிகள் நாயகம் (ஸல்) மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். போரின்போது, சடலங்களைச் சிதைக்கவோ அல்லது சிறுவர்கள், பெண்கள், முதியோர் ஆகியோரைக் கொல்லவோ கூடாது என முஸ்லிம்களுக்கு நபிகள் நாயகம் அறிவுறுத்தி உள்ளார்கள். பின்வாங்கும் இராணுவ வீரர்கள், காயமடைந்தோர், சண்டையில் பங்குபெறாதோர் ஆகியோரிடம் கருணை காட்டவேண்டும் என்றும் அவர் கூறி உள்ளார். (கிதப் அல்-ஜிஹாத்தில் முஸ்லிமும், கிதப் அல்-தியத்தில் அல்-திர்மிதியும், அல்-முஸான:ஃப்பில் இபின் அபி ஷேபாவும் அறிவித்துள்ள ஹதீஸ்).

நபிகள் நாயகம் தெளிவான கட்டளைகளும் அறிவுரைகளும் கூறியிருக்கையில், ஐஎஸ்ஐஎஸ் தனது வன்செயல் நடவடிக்கைகளை எப்படி நியாயப்படுத்த முடியும்? இதுவரை இவர்கள் செய்திருக்கும் அனைத்துமே இஸ்லாத்திற்குப் புறம்பானவை, தற்காத்துப்பேச முடியாதவை என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபனமாகிறது!

## இஸ்லாமிய (கலி:ஃபா) ஆட்சியின் சில சிறப்பியல்புகள்

கலி:ஃப் அல்லது கலி:ஃபா என்ற சொல்லின் நேரடி அர்த்தம் "வாரிசு" என்பதாகும். ஆனால், இஸ்லாமியச் சமூகத்தின் அரசியல் மற்றும் சமய விவகாரங்களை மேற்பார்வையிடும் இஸ்லாமிய ஆட்சியாளரைக் குறிப்பதற்கு இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. கலி:ஃப் ஆளும் வட்டாரம் அல்லது நாடு (கலி:ஃபா) ஆட்சி எனப்படுகிறது.

கடந்தகால இஸ்லாமிய கலி:ஃபாக்களின் செறிவான விவரங்களை இஸ்லாமிய வரலாறு நமக்கு வழங்குகிறது. இஸ்லாமிய (கலி:ஃபா) ஆட்சியின் சிறப்பியல்புகளில் சிலவற்றைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் வெளிப்படுத்துகின்றன:

- அமைதியான சூழலில் சேர்ந்து வாழும் பல்வேறு சமய நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் - முஸ்லிம் ஆட்சியாளர்களின் ஆட்சியின்கீழ் இடம்பெற்றிருந்த முஸ்லிம் அல்லாதோர் இஸ்லாத்திற்கு மாறும்படி கட்டாயப் படுத்தப்படவில்லை. குர்-ஆனும் இதைத்தான் கூறுகிறது: "சமயத்தில் எந்தவித நிர்ப்பந்தங்களும் இருக்கக்கூடாது" (2:256).
- இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தன்னடக்கத்தையும் சமயப் பற்றுதலையும் கடைப்பிடிப்பவர்கள். இவர்கள் தங்களது மக்களின் கௌரவச் சேவகர்களாகத் தங்களைப் பிரதிநிதித்துக் கொள்கிறார்கள்.
- இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இஸ்லாத்தைப் பற்றி தெளிவான, ஆழமான அறிவாற்றல் பெற்றிருப்பதோடு, சமயத்தைப் பற்றி கற்றுக்கொள்ள தங்களது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பகுதியைச் செலவிட்டவர்கள். தங்களது சமய அறிவாற்றலுடன், இவர்கள் விவேகமாக ஆட்சி புரிந்து, மக்களின் இதயத்தில் இடம்பிடித்தனர்.
- யோசனைகளை வரவேற்கும் மனப்பக்குவம் - கடந்தகால கலி∴பாக்கள், தங்களது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய யோசனைகளையும் விவரங்களையும் வரவேற்கும் மனப்பக்குவத்தைப் பெற்றிருந்ததோடு, தங்களது ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்துவதில் மட்டுமன்றி, வருங்காலத்தில் பயனளிக்கக்கூடிய பொருளியல், சமூக, அறிவாற்றல் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த முற்பட்டனர்.

டாக்டர் ருசிடி அல்யான், தனது அல்-இஸ்லாம் வ அல்-கலி∴பா (1976) நூலில், தேர்ந்தெடுக்கப்படும் கலி∴பாவின் முக்கியமான பண்புகளை வலியுறுத்தியுள்ளார்:

- ஷரியா சட்டத்தைப் பற்றி ஆழ்ந்த அறிவாற்றல் பெற்றிருப்பதோடு, ஆட்சிமுறையின் அரசியல் மற்றும் நிர்வாக விவகாரங்களை அறிந்திருக்கவேண்டும்.
- நியாயமாகவும், ஒழுக்கமாகவும், மேன்மையாகவும், மன முதிர்ச்சியுடனும், நிதான புத்தியுடனும் இருக்கவேண்டும்.

சமயத்தின் புனிதத்தைக் கட்டிக்காத்து, நியாயமான, முன்னேறத்தக்க, அனைத்துலக ஏற்புமிக்க, ஒழுக்கமான ஆட்சிமுறையை உருவாக்குவதும் கலிபாவின் பொறுப்பாகும். அதோடு, முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதோர் இருவரையும் பாதுகாப்பதையும் தனது கடமையாக அவர் கருதவேண்டும். இஸ்லாமிய கலிபாக்கள் கட்டிக்காத்த இஸ்லாமிய (கலி∴பா) ஆட்சியின் தன்மைகளை நிறைவேற்றுவதில் ஐஎஸ்ஐஎஸ் சிரமங்களை எதிர்நோக்கும்.

*"தொண்டைக்குழாய்க்கு சற்று அப்பால்வரை மட்டுமே குர்-ஆனை படிப்பவர்களும், வில்லில் இருந்து பாயும் அம்பைப்போல சமயத்தைவிட்டு வேகமாக விலகிச் செல்வோரும் கவாரிஜ் ஹருரியா என இந்த ஹதீஸ் தவிர மற்ற பல பாரம்பரியங்களும் கூறுகின்றன."*

## ஐஎஸ்ஐஎஸ் உண்மையிலேயே இஸ்லாமிய ஆட்சிமுறையை உயிர்ப்பிக்கப்போகும் (கலிஃபா) ஆட்சியாக உருவெடுக்குமா?

ஐஎஸ்ஐஎஸ் குழுவின் பற்பல அட்டூழியங்களும் ஊடகங்களில் பரவலாக வெளியிடப்பட்டுள்ளன. கடந்தகால இஸ்லாமிய கலிஃப்பாக்களிடம் கவனிக்கப்பட்ட சிறப்பியல்புகளில் சிலவற்றுடன் ஒப்பிடுகையில், இஸ்லாம் ஊக்குவிக்கும் கோட்பாடுகள் மற்றும் பண்புகளிலிருந்து ஐஎஸ்ஐஎஸ் வெகுதூரம் விலகிச்செல்கிறது என்பது தெள்ளத்தெளிவு.

- ஐஎஸ்ஐஎஸ் குழுவின் கொடூரமும் வன்செயலும், கருணை, மரியாதை, அமைதியாகச் சேர்ந்து வாழுதல் ஆகியவற்றின்மீதான இஸ்லாத்தின் வலியுறுத்தலைச் சீர்குலைக்கின்றன.
- ஐஎஸ்ஐஎஸ் சட்டபூர்வ இஸ்லாமியத் தீர்ப்புகளை வெளியிட்டு அமல்படுத்தும் முறையும், தண்டனை அளிக்கும் முறையும் கேள்விக்குரியவை. இந்தத் தீர்ப்புகளை வெளியிட்டு அமலாக்குவதற்கு, இஸ்லாமிய அறிவியலில் நன்கு திறன்பெற்ற கல்விமான்கள் ஐஎஸ்ஐஎஸ் குழுவில் இருக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.
- தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு, கல்வி, வேலை, அடிப்படை வசதிகள் போன்றவற்றை அமைத்துத்தந்து சேவையாற்றுவதைவிட, தங்களது ஆட்சிப்பரப்பை விரிவுபடுத்துவதில்தான் ஐஎஸ்ஐஎஸ் குழுவுக்கு அதிக நாட்டமிருப்பதாகத் தோன்றுகிறது.
- ஐஎஸ்ஐஎஸ் முஸ்லிம்களுக்கு இடையில் அதிக பிரிவினையை ஏற்படுத்தியதோடு (மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில்), அவர்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும் அதிகமாக்கியுள்ளது.

- ஐஎஸ்ஐஎஸ் சமயத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறது. தங்களது அட்டூழியங்களுடன் உலகைக் கதிகலங்கச் செய்து, கொடூரமான அணுகுமுறையைக் கையாளுகிறது.

எனவே, இணையம், சமூக ஊடகம் அல்லது வேறெந்த வழியிலாவது ஐஎஸ்ஐஎஸ் பரப்பும் பற்பல யோசனைகளையும் பிரசாரங்களையும் நீங்கள் நம்பாதிருப்பது மிகவும் முக்கியம். **ஐஎஸ்ஐஎஸ் முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் பிரதிநிதிக்கவில்லை. இது ஒரு தீவிரவாதக் குழு**!

# தீவிரவாதிகளின் வரவு - நபிகள் நாயகம் (ஸல்) என்ன கூறியிருக்கிறார்

இதுபோன்ற தீவிரவாதிகளின் வரவைப் பற்றி நபிகள் நாயகம் (அமைதியும் அருளும் அவர் மீது உண்டாகட்டும்) தமது ஹதீஸ்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

- அபு ஹுரைரா அறிவித்தது, நபிகள் நாயகம் கூறியதாவது, "... சமயத்தின் பெயரில் உலகைச் சூறையாடும் ஆண்கள் வருவார்கள், ஆட்டுத்தோல் போர்த்தி மக்களை ஏமாற்றுவார்கள், அவர்களின் பேச்சு சீனியைவிட இனிப்பானது, அவர்களது இதயமோ ஓநாய்களின் இதயமாகும். அல்லாஹ் கூறியதாவது: "நீ ஏமாற்ற முயல்வது என்னையா அல்லது நீ சதிசெய்வது எனக்கு எதிராகவா? என்மீது ஆணையாக, இத்தகைய மக்களை முற்றிலும் காரண காரியமற்ற நிலைக்குள்ளாக்கும் ஃபித்னாவை இத்தகைய மக்கள்மீது, இவர்களுக்கு மத்தியில் அனுப்புவேன்." (திர்மிதி).

---

*"அல்லாஹ்-வின் தூதர், ஈராக்கின் திசையை நோக்கிக் கையைக் காட்டி கூறக் கேட்டேன், "அங்கே அவர்கள் இருப்பார்கள், தொண்டைக்குச் சற்று அப்பால்வரை மட்டுமே குர்-ஆனை படிப்பவர்கள், வில்லிலிருந்து பாயும் அம்பைப்போல அவர்கள் விரைவாக இஸ்லாத்தைவிட்டு விலகிச்செல்வார்கள்."*

---

நமது வாழ்நாளின் ஆகப்பெரிய அவதூறான, தவறான ஒன்றை சரியானதாக ஒலிக்கச் செய்து, நல்லதாகக் காட்சியளிக்கச் செய்திருப்பது எப்படியென சிந்திக்கும் நேர்மை வழுவாத, சமயப் பற்றுள்ள மக்களை ஹதீஸ் குறிக்கிறது.

- கொலைகாரன் தான் கொலை செய்ததற்கான காரணத்தை அறியாமலும், கொலை செய்யப்பட்டவர்கள் தங்களது உயிரை இழந்ததற்கான காரணத்தை அறியாமலும் இருக்கக்கூடிய ஒரு காலம் வரும் என நபிகள் கூறியிருக்கிறார். (முஸ்லிம்).
- அப்துல்லா பின் மசூது அறிவிப்பது, நபிகள் நாயகம் கூறியதாவது" "...வயதில் இளையவராகவும் எண்ணத்தில் முட்டாள்தனமாகவும் உள்ள மக்கள் வருவார்கள், தங்களது தொண்டைக்கு அப்பால் உட்செல்லாதவாறு குர்-ஆனை வாசிப்பார்கள், ஆகச்சிறந்த கற்பனை கூற்றுகளை உச்சரிப்பார்கள், அம்பு தனது குறியைத் துளைக்கும் வேகத்தில் சமயத்தைக் கடப்பார்கள்." (திர்மிதி)

இமாம் அல் திர்மிதி கூறியதாவது: "தொண்டைக்குழாய்க்கு சற்று அப்பால்வரை மட்டுமே குர்-ஆனை படிப்பவர்களும், வில்லில் இருந்து பாயும் அம்பைப்போல சமயத்தைவிட்டு வேகமாக விலகிச் செல்வோரும் கவாரிஜ் ஹருரியா (தீவிரவாதிகள் / போராளிகள்) என இந்த ஹதீஸ் தவிர மற்ற பல பாரம்பரியங்களும் கூறுகின்றன."

- யுஸைர் பின் அம்ர் கூறியதாவது: "நான் சஹல் பின் ஹுனைஃப்பிடம் கேட்டேன், "கவாரிஜ் பற்றி நபிகள் நாயகம் ஏதாவது சொல்லக் கேட்டிருக்கிறாயா?" என்று. அவர் கூறினார், "அல்லாஹ்-வின் தூதர், ஈராக்கின் திசையை நோக்கிக் கையைக் காட்டி கூறக் கேட்டேன், "அங்கே அவர்கள் இருப்பார்கள், தொண்டைக்குச் சற்று அப்பால்வரை மட்டுமே குர்-ஆனை படிப்பவர்கள், வில்லிலிருந்து பாயும் அம்பைப்போல அவர்கள் விரைவாக இஸ்லாத்தைவிட்டு விலகிச்செல்வார்கள்." (புகாரி)

ஹதீஸ்கள் கூறுவதைப்போல, தீவிரவாதிகள் தலையெடுக்கும் காலம் வரும். கடந்தகாலத்தில் பல்வேறு தீவிரவாதக் குழுக்கள் இருந்திருக்கின்றன, இன்று ஐஎஸ்ஐஎஸ் வடிவில் அதைக் காண்கிறோம். எனவே, ஐஎஸ்ஐஎஸ் பரப்புவதையும் நம்புவதையும் பற்றி படிக்கும்போது நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது மிகவும் முக்கியம். இல்லாவிட்டால், அவர்களது தீவிரவாத யோசனைகளை நம்பி நீங்கள் தவறான வழியில் செல்லக்கூடும்.

# நீங்கள் என்ன செய்யமுடியும்?

ஈராக்கிலும் சிரியாவிலும் நடக்கும் நிகழ்வுகளைக் கண்டு சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் மெத்தனமாக இருக்கவில்லை. சிங்கப்பூர் இஸ்லாமியச் சமய மன்றம் (முயிஸ்), சிம்ப்லி இஸ்லாம், ராடின் மாஸ் சமய மற்றும் கல்விக் குழு போன்ற அமைப்புகள், சிரியா சண்டையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட பல்வேறு மனிதாபிமான மற்றும் நன்கொடை திரட்டு முனைப்புகளுக்கு ஏற்பாடு செய்திருக்கின்றன. இந்த முனைப்புகளில் சிலவற்றில் ஈடுபாடுகொள்ள நீங்கள் விரும்பினால், இவர்களுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**படன் அகாமா & பெலஜாரான் ராடின் மாஸ் (BAPA)**
(ராடின் மாஸ் சமய மற்றும் கல்விக் குழு)
www.bapa.org.sg/Syrian-Humanitarian-Appeal.html

**ரஹ்மதன் லில்-ஆலமின் அறநிறுவனம்**
www.rlafoundation.org.sg

**சிம்ப்லி இஸ்லாம்**
www.simplyislam.com.sg/main/aid-to-syrian-refugees/

ஐஎஸ்ஐஎஸ் அல்லது (கலிஃபா) ஆட்சி பற்றி கேள்வி இருக்கிறதா? மத்தியக் கிழக்கில் நடப்பவை பற்றி மேலும் விளக்கம் வேண்டுமா? மேல்விவரம் நாடுவதற்கு நீங்கள் செய்யக்கூடியவற்றின் பட்டியல் இதோ:

- சமய மறுவாழ்வுக் குழுவை (RRG) அணுகவும். கதிஜா பள்ளிவாசலில் அமைந்திருக்கும் வள மற்றும் ஆலோசனை நிலையத்தில், சமயத் தீவிரவாதம் மற்றும் உங்களுக்கு மனப்போராட்டம் ஏற்படுத்தக்கூடிய இதைச் சார்ந்த மற்ற விவகாரங்களைப் பற்றி RRG உறுப்பினர்கள் கலந்து பேசுவார்கள்.

- உங்களுக்குத் தெரிந்த உஸ்தாஜ் (ஆசிரியர்) அல்லது உஸ்தாஜாவிடம் (ஆசிரியை) முஸ்லிம்களைப் பாதிக்கும் சமூக-அரசியல் நிகழ்வுகள் பற்றி விவரம் கேட்க விரும்புகிறீர்களா? அந்த உஸ்தாஜ் அல்லது உஸ்தாஜா, முயிஸ் நிர்வகிக்கும் அசாடிஸா அங்கீகரிப்புத் திட்டத்தில் (ARS) இடம்பெறுகிறாரா என்பதை உறுதிப்படுத்துங்கள். இத்திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்கும் சமய ஆசிரியர்கள் சமயத்தைப் பற்றி கலந்துபேசத் தகுதிபெற்றவர்கள் என நீங்கள் உறுதியாக நம்பலாம்.
- உங்கள் கேள்விகளுடன் ஆக அருகிலுள்ள பள்ளிவாசலை அணுகவும். அங்குள்ள சமய ஆசிரியர்கள், தங்களால் கேள்விகளுக்குப் பதிலளிக்க இயலாவிட்டாலும், மற்ற வல்லுநர்களிடம் உங்களைப் பரிந்துரைத்து, உங்கள் ஐயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள துணை புரிவார்கள்.

எண் 583 கேலாங் சாலை சிங்கப்பூர் 389522 எனும் முகவரியில் அமைந்திருக்கும் சமய மறுவாழ்வுக் குழுவின் வள மற்றும் ஆலோசனை நிலையத்தில் (RCC), சண்டை மற்றும் சமயத் தூண்டுதலுள்ள தீவிரவாதம் தொடர்பான மற்ற விவகாரங்கள் பற்றி விளக்கமும் புரிந்துணர்வும் நாட பொதுமக்கள் வரவேற்கப்படுகின்றனர். குழுவின் www.rrg.sg இணையத்தளத்தையும் முகநூல் பக்கத்தையும்கூட பொதுமக்கள் பார்க்கலாம்.

*ஃபியூச்சர் ப்ரின்ட் பிரைவெட் லிமிடட் நிறுவனத்தின் வடிவமைப்பு.*
*தொலைபேசி : 6842 5500 மின்னஞ்சல் : admin@futureprint.com.sg*




சமய மறுவாழ்வுக் குழு வள மற்றும்
ஆலோசனை நிலையம்

583 கேலாங் சாலை சிங்கப்பூர் 389522
தொலைபேசி: 6743 8466 இணையத்தளம்: www.rrg.sg